**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை

22-04-2026 is amended as per the order in Memo dated, 25-05-2026 J.M. 25.5.2026

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.703/2023.**

சி.என்.ஆர். எண்.TNTU09-007816-2023

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | பாலசுப்ரமணி, வயது-66, த/பெ.ஏகாம்பரம், எண்.1, கீழ் தளம், பள்ளித்தெரு, கோயம்பேடு, சென்னை - 600 107. |
| 2. | எதிரிகள் | C.ஹரி த/பெ.சொக்கலிங்கம், எண்.71, காந்தி நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை - 600078. |
| 3. | குற்றம் | 138 NI ACT |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 20.04.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்டநாள் | 16.10.2023 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | - |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 13.03.2025 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.17.10.2025 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 3583/2025. |
| 10 | வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | பு.த.சா.1-02.05.2025, 03.07.2025, 20.06.2025 எ.த.சா.1, எ.த.சா.2 - 23.01.2026, |



IC 22.4.2026

| | | |
|---|---|---|
| | | 11.02.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள் | 08.07.2025 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 22.04.2025 |
| 14 | தீர்வு | கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை |

**<u>நீதித்துறை படிவம் எண். 61</u>**

புகார்தாரர் : பாலசுப்ரமணி, த/பெ.ஏகாம்பரம்

எதிரிகள் : C.ஹரி, த/பெ.சொக்கலிங்கம்

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கபட்டு, மேற்படி குற்றத்திற்கு மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.4,24,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.4,34,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்டயீடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வரிசை எண் | எதிரி பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | C.ஹரி | சொக்கலிங்கம் | – | – | எண்.71, காந்தி நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை – 600078. | – |



1C.ஜப்ஜ 22.4.2026

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | வழக்கு விசாரணையின் தொடக்கம் | வழக்கு விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 20.04.23 | 16.10.23 | – | – | 13.03.25 | 08.07.25 | 22.04.26 | – |

இவ்வழக்கு கடந்த 16.10.2023 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 08.07.2025 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.கே.ரஞ்சித்குமார், B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.கதிரவன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பிரிவு 138 மற்றும் 357 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 1. வழக்கின் சுருக்கம்

குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமுறையீட்டாளருக்கு நன்கு அறிமுகத்தின் அடிப்படையில், அவருடைய சில்லரை கடனை தீர்க்கவும், குடும்ப செலவிற்காகவும், சிமெண்ட் ஹார்டுவேர் கடை முதலீட்டிற்காகவும், வேண்டி குற்றமுறையீட்டாளரிடம் கடந்த 20.04.2023 ம் தேதி ரூ.4,00,000/- கடனாக பெற்றதாகவும், கடன் தொகையை மூன்று மாத காலத்திற்குள் திருப்பித்தருவதாக உறுதி அளிததாகவும், அன்றைய தினமே 26.07.2023 ம் தேதியிட்ட வாணியம்பாடி கிளை, சென்னை IndusInd பேங்க் காசோலை எண்.878374-யை அசல் மற்றும் 3 மாத வட்டி தொகை சேர்த்து



K. [illegible] 22.4.2026

ரூ.4,24,000/-ற்கு கொடுத்ததாகவும் அதன்படி 02.08.2023 அன்று குற்றமுறையீட்டாளர் அவருடைய வங்கிக்கணக்குள்ள வாணியம்பாடி கிளை, பின்கேர் ஸ்மால் பைனான்ஸ் பேங்கில் மேற்படி காசோலையை வசூலுக்காக செலுத்திய போது குற்றஞ்சாட்டப்பட்டவரின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று காசோலை 03.08.2023ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ உடன் திருப்பப்பட்டதாகவும், அதனால், 10.08.2023 அன்று காசோலை பணத்தை திரும்ப செலுத்தும்படி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை வாங்காமல் திருப்பி அனுப்பியுள்ளதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை, காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளர் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் எதிரியாரென்று தெரியாது. அவரிடம் நான் எனது செக்கை கொடுக்கவில்லை. நான் எனது நண்பர் சங்கர் என்பவரிடம் தான் ரூ.50,000/- பணம் கடனாக பெற்று இந்த காசோலையை கொடுத்தேன். அந்த கடன் தொகையை வட்டியுடன் அவருக்கு கொடுத்துவிட்டேன் செக்கை கேட்டபோது தருகிறேன் என்று சொல்லியிருந்து அவர் செக்கை கொடுக்கவில்லை குற்றவாளி இல்லை எனவும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1



K. ப்ரபு 22.4.2026

ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளரே பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:-**

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான பாலசுப்ரமணி தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும் 26.07.2023ம் தேதி சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் 878374 என்ற எண்ணுள்ள ரூ.4,24,000/-க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 03.08.2023ம் தேதியிட்ட Fincare Small Finance bank Ltd வங்கி, வாணியம்பாடி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்றும், 10.08.2023ம் தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் துறை வழங்கிய திருப்புதல் மேற்குறிப்பு பு.த.சா.ஆ.3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை பொய் வழக்கு என்றும், அவர் யார் என்றே தெரியாது, என்னையும் அவருக்கு தெரியாது சங்கர் என்பவர் வாங்கி கொடுத்தார். நான் திருப்பி சங்கர் என்பவரிட்ம முழு தொகையையும் கட்டி விட்டேன். காசோலையை வாங்கி தருவதாக கூறினார். அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும் கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் அவரது கணவர் திரு.மணிகண்டன் எ.த.சா1 ஆகவும், திரு.ராஜா எ.த.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.த.சா.ஆ.1 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றமுறையிடுபவர் தரப்பில் 18.04.2025ம் அன்றும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் 18.04.2025ம் தேதி வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.



K. ஜ்ஜ 22.4.2026

**6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்**

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

**1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?**

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.



K. ஜோதி 29.4.2026

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

**7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:-**

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 26.07.2023ம் தேதி சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் 878374 என்ற எண்ணுள்ள ரூ.4,24,000/-க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 3.08.2023ம் தேதியிட்ட Fincare Small Finance bank Ltd வங்கி, வாணியம்பாடி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ அசலில் காரணம் Refer to Drawer என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.3 10.08.2023ம் தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் துறை வழங்கிய திருப்புதல் மேற்குறிப்பு பற்றியதாகும்,

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது Refer to Drawer என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது. பு.த.சா.ஆ.3 பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது. மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " வழக்கை



K. [illegible] 22.4.2026

யார் பெயரில் தாக்கல் செய்துள்ளளேன் என்றால் ஹரி. அவர் எங்கு குடியிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்றால் என்னோடு பணம் பரிவர்த்தனை செய்து வந்த காலத்தில் சிமெண்ட் கடை வைத்திருந்தார். எனக்கு அவரை எத்தனை வருடம் தெரியும் என்றால் 2020ல் இருந்து தெரியும். எந்த காரணத்திற்காக எப்பொழுது என்ன தேதியில் பணம் வாங்கினார் என்றால் 20.04.2023 சில்லரை கடன்களை அடைப்பதற்காகவும், சிமெண்ட் வியாபாரத்திற்காகவும் கடன் வாங்கினார். அவருக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 20.04.2023ல் கொடுத்தேன். எவ்வளவு பணம் கேட்டார் என்றால் ரூ.400,000/−கேட்டார். யாருடன் எந்த இடத்தில் யார் முன்னிலையில் பணம் கேட்டார் என்றால் என்னுடைய வீட்டில் சங்கர் என்பவருடன் வந்து பணம் கேட்டார். சங்கர் என்பவர் யார் என்றால் எனக்கும் அவருக்கும் நண்பர். சங்கர் மூலமாகதான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியை சங்கர் தான் அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரிதான். எத்தனை வருடத்திற்கு முன்பு அறிமுகம் ஆனார் என்றால் 2020ல் அறிமுகம் ஆனார். சங்கர் சீட்டு நடத்துபவரா என்றால் இல்லை. கடனை வட்டியாக கேட்டாரா அல்லது கைமாத்தாக கேட்டாரா என்றால் வருடத்திற்கு 24 சதவீத வட்டியாகவும், மாதத்திற்கு 100க்கு ரூ.2 வட்டி கேட்டார். எந்த தேதியில் யாரை வைத்து காசோலை கொடுத்ததார் என்றால் 20.04.2023ம் தேதி அன்று மூன்று மாதத்தில் ரூ.2 வட்டியுடன் கொடுப்பதாக சொன்னதால், ரூ.4,24,000/−த்திற்கு காசோலையை 20.07.2023ம் தேதிக்கு சங்கர் முன்னிலையில் கொடுத்தார். காசோலை எண் தற்போது எனக்கு நினைவில்லை. வங்கி பெயர் IndusInd பேங்க் சென்னை. காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால், அவர்தான் பூர்த்தி செய்து கொண்டுவந்தார். எப்படி ரூ.4,24,000க்கு பூர்த்தி செய்யப்பட்டது என்றால் முன்கூட்டியே சங்கரும் எதிரியும் பேசி முடிவு செய்திருந்ததால், பூர்த்தி செய்து எடுத்துவந்து கொடுத்தார். காசோலையில் எழுதப்பட்டடுள்ள மையில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். கையெழுத்து வேறு மையில் உள்ளது. குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கறிஞரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். இந்த காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப ஆட்சேபனை இருக்கறதா என்றால் இல்லை. சங்கர் என்பவரிடம்



K.ஜுஷ 22.4.2026

குற்றம் சாட்டப்பட்டவர் சீட்டு கட்டி வந்ததால் இவ்வழக்கு காசோலையை அந்த சீட்டு தொகைக்காக செக்யூரிட்டிக்காக கொடுத்தது என்றாலும் அ ந்த காசோலையை சங்கர் என்பவரிடமிருந்து வாங்கி எதிரியின் மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேறு ஒருவரிடம் சென்னையில் இருந்து காசோலையை வாங்கி வாணியம்பாடி நீதிமன்றத்தில் ஹரி என்பவரின் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டி நோக்கம் என்வென்றால் நான் கணக்கு வைத்திருக்கும் வங்கி இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வருவதால் இங்கு தாக்கல் செய்தேன் என சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

**8. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின்



K. ஜெபுத் 22.4.2026

மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளார்களா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் எ.த.சா.1 ஆக குற்றம்சாட்டப்பட்டவரின் கணவர் திரு.குணசேகரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். எதிரி தரப்பில் சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9. எ.த.சா.1 திரு.மணிகண்டன் என்பவர் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் பாலசுப்பிரமணி என்பவர் என் தந்தையின் மீது அவரிடமிருந்து பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நாங்கள் புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை. சங்கர் என்பவரிடம் தான் ரூ.1,00,000/- வாங்கினோம். 4 வருடங்களாக அவரிடம் தான் வட்டி காசும், அசலும் கொடுத்து வந்தோம். சங்கர் என்பவரிடம் பணம் வாங்கும்போது என் தந்தையின் பெயரில் உள்ள காசோலை ஒன்றை சங்கர் என்பவரிடம் கொடுத்தோம். அவர் பணம் கொடுத்தவுடம் திருப்பி தந்துவிடுவதாக கூறினார். இன்று வரை காசோலையை கொடுக்கவில்லை, யாரிடம் கொடுத்தார் என்றும் தெரியவில்லை. ஒரு முறை சங்கர் என்பவர் வாணியம்பாடி வங்கி கிளையில் ரூ.10,000/- ஐ போடுமாறு கூறினார். நாங்களும் அந்த வங்கி கணக்கிற்கு போட்டோம். அந்த ரசீது எ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அது நகல் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) 6 வருடங்களுக்கு முன்பு அசல் மற்றும் வட்டி தொகை சேர்த்து ரூ.5,00,000ஆக சங்கர் என்பவரிடம் கொடுத்து விட்டோம். பணம் வாங்கி 6 வருடம் ஆகி விட்டது. ஆனால் 2 வருடங்களுக்கு பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். புகார்தாரரை எனக்கு தெரியாது. சங்கர் என்பரை மட்டும் தான் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது " சங்கர் என்ன தொழில் செய்கிறார் என்றால் தெரியாது. ஆனால் அவர் கடையின் முன்பு கேஸ் வெல்டிங் என எழுதியிருக்கும். அவரது கடை எங்கு உள்ளது என்றால் விருகம்பாக்கம்,



K.ஜெ 22.4.2026

காந்தி நகரில் உள்ளது. வேறு ஏதேனும் தொழில் செய்கிறாரா என்றால் அது தெரியாது. அவர் பைனான்ஸ் நடத்தி வருகிறார். சங்கருக்கும் எதிரியான என் தந்தைக்கும் இடையே நடந்த பண பரிவர்த்தனை பற்றி என் தந்தைக்கு தான் தெரியும் என்றால் சரியல்ல. எனக்கும் தெரியும். பலமுறை நான் தான் வட்டி செலுத்தியுள்ளேன். அசல் ரூ.50,000/-யும் நான் தான் கொடுத்தேன். சங்கரிடம் கொடுத்ததாக சொல்லும் காசோலையை அவர் திருப்பி தராதது சமம்பந்தமாக விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை. ஒரே ஏரியா என்பதால் தந்து விடுவார் என்ற நம்பிக்கையில் கொடுக்கவில்லை. இந்த வழக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்த பிறகோ அல்லது வழக்கின் விவரங்கள் தெரிந்த பின்போ மேற்படி சங்கரிடம் சென்று கையளித்த காசோலையை கேட்டோமா என்றால் கேட்டோம், அவர் என்னிடம் தர மறுக்கிறார்கள். நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போதாவது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அப்பா கொடுத்த தகவலின் பேரில்தான் வழக்கறிஞர் இந்த வழக்கை நடத்துகிறார் என்றால் சரிதான். வழக்கறிஞருக்கு கொடுத்த தகவலின் பெயரில் புகார்தாரரரை குறுக்கு விசாரணை செய்யும்போது இந்த காசோலையானது சீட்டுக்காக கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞரின் அறிவிப்பை என் தந்தை பெற்றுக்கொண்டாரா என்றால் வீட்டுக்கே வரவில்லை. என் தந்தைக்கும் சங்கருக்கு இடையே நடைபெற்ற பண பரிவர்த்தனை தொடர்பாக ஒரு இடத்தில் 4 ஆண்டுகள் என்றும், மற்றொரு இடத்தில் 6 ஆண்டுகள் என்றும், முன்னுக்குப்பின் முரணாக சொல்லியிருப்பதால், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சங்கர் என்ற நபரை பற்றி சொன்ன சங்கதிகளை எல்லாம் சங்கர் என்பவரை விசாரித்தால்தான் தெரியும். நான் தாக்கல் செய்த எ.த.சா.ஆ.1ல் இந்த வழக்கு விவரம் இல்லை என்றாலும், அது குறியீடு செய்ததே தவறு என்றாலும் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10. எ.த.சா.2 திரு.ராஜா என்பவர் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும். அவர் சங்கர் என்பவரிடம் இருந்து 4,5 வருடங்கள் இருக்கும், அப்போது ரூபாய்



K.த்ர 22.4.2026

ஒன்றரை இலட்சமோ ஏதோ வாங்கினார். பிறகு சாட்சி 1 லட்சம் என்று கூறினார். சங்கர் என்பவர் எதிரியிடம் இருந்து பல முறை வீட்டில் வந்து பணம் வாங்கி சென்றார். இடையில் சங்கர் என்பவர் ஹரி என்பவரிடம் வந்து பிரச்சனை செய்வார். இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்துஸ்தான் வங்கியின் செக் லீப் ஒன்றை சங்கர் என்பவர் எதிரியிடம் இருந்து வாங்கி சென்றார். அந்த காசோலையை கொடுப்பதாக கூறினார்கள். ஆனால் கொடுக்கவில்லை. அதை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது " சங்கர் என்பவர் எதிரியிடம் பணம் வாங்கி செல்வதை நான் எனக்கு எத்தனை முறை பார்த்திருக்கிறேன் என்றால் இரண்டு மூன்று முறை பார்த்துள்ளேன். கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 5 வருடத்திற்கு முன்பு. எவ்வளவு ரூபாய் பணம் வாங்கி செல்வார் என்றால் பணம் கேட்டு பிரச்சனை செய்யும் போது 10,000, 20,000 ரூபாய் என கொடுப்பார். பணம் சம்மந்தமான பிரச்சனை எப்போது முடிவுக்கு வந்தது என்று சொன்னால் தெரியாது. முழு தொகையையும் செலுத்தியபின்புதான் பிரச்சனை தீர்ந்திருக்கும் என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. பணம் பிரச்சனையை குறித்து எனக்கு நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு தான் தெரியும் என்றால் சரிதான். அதன் பிறகு எதுவும் இது தொடர்பாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காசோலையை சங்கர் வாங்கி சென்றதாக பொய்சாட்சியம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் மகனே ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கி சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

12. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு



K.ரூபத் 22.4.2026

30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, பதில் அறிவிப்பு ஏதும் தராமல் இருந்ததாகவும், எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், இந்த காசோலை மோசடி வழக்கு என்பது எதிரி செய்த குற்றத்திற்கு தண்டனை கோரும் வழக்கு என்ற வகையில் நிலைக்கத்தக்கதாகிறது. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

13. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், இந்த வழக்கின் காசோலை சங்கர் என்பவரிடம் சீட்டு கட்டியதற்காக பிணையமாக கொடுக்கப்பட்ட காசோலை என்பதனை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும், அந்த காசோலையை வைத்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாணியம்பாடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும், அந்த சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அனுகூலமாக வழங்கி, இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள



22.4.2026

மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

15. இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான பாலசுப்ரமணி என்பவரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் அவரது தொழில் தேவைக்காகவும், குடும்ப செலவிற்காகவும், சிமென்ட் ஹார்டுவேர் கடை முதலீட்டிற்காகவும், கடந்த 20.04.2023ம் தேதி அன்று ரூ.4,00,000/-ஐ கடனாக பெற்றுக்கொண்டதாகவும், அன்றைய தினமே 24சதவீத வட்டியுடன் சேர்த்து ரூ.4,24,000/-ற்கான 26.07.2023 தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் IndusInd bank சின்மய நகர், சென்னை கிளையின் காசோலை எண் 878374ஐ குற்றமுறையிடுபவருக்கு கொடுத்ததாகவும், குற்றம்சாட்டப்பட்டவர் கேட்டுக்கொண்டபடி 02.08.2023 அன்று குற்றமுறையிடுபவரின் வங்கிக்கணக்குள்ள Fincare Small Finance Limited வங்கி, வாணியம்பாடி கிளையில் பணமாற்றத்திற்காகவும் செலுத்தியதாகவும், ஆனால் மேற்படி காசோலை குற்றம்சாட்டப்பட்டவரின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை "Refer to drawer" என 03.08.2023 அன்று திருப்பப்பட்டதாகவும், அதன்பிறகு குற்றமுறையிடுபவர் 10.08.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பினை குற்றம்சாட்டப்பட்டவர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்பதும், பு.த.சா.ஆ.1 26.07.2023ம் தேதி சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் 878374 என்ற எண்ணுள்ள ரூ.4,24,000/-க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்பதும், 3.08.2023ம் தேதியிட்ட Fincare Small Finance bank Ltd வங்கி, வாணியம்பாடி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ அசலில் காரணம் Refer to Drawer என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.2 என்பதும், 10.08.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் துறை வழங்கிய திருப்புதல் மேற்குறிப்பு பு.த.சா.ஆ.3 என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம்



K.ஜெயந்த் 22.4.2026

மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16. குற்றமுறையீட்டாளர் அவரது குறுக்கு விசாரணையின் போது வழக்கை யார் பெயரில் தாக்கல் செய்துள்ளளேன் என்றால் ஹரி என்றும் எந்த காரணத்திற்காக எப்பொழுது என்ன தேதியில் பணம் வாங்கினார் என்றால் 20.04.2023 சில்லரை கடன்களை அடைப்பதற்காகவும், சிமெண்ட் வியாபாரத்திற்காகவும் கடன் வாங்கினார் என்றும், எதிரி தான் என்னிடம் பணம் கேட்டார் என்றும், எந்த தேதியில் யாரை வைத்து காசோலை கொடுத்ததார் என்றால் 20.04.2023ம் தேதி அன்று மூன்று மாதத்தில் 2ரூ வட்டியுடன் கொடுப்பதாக சொன்னதால், ரூ.4,24,000த்திற்கு காசோலையை 20.07.2023ம் தேதிக்கு சங்கர் முன்னிலையில் கொடுத்தார் என்றும், வங்கி பெயர் சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால், அவர்தான் பூர்த்தி செய்து கொண்டுவந்தார் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் 26.07.2023ம் தேதி சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் 878374 என்ற எண்ணுள்ள ரூ.4,24,000/-க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 ஐ மற்றும், 3.08.2023ம் தேதியிட்ட Fincare Small Finance bank Ltd வங்கி, வாணியம்பாடி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ அசலில் காரணம் Refer to Drawer என்று குறிப்பிடப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2ஐ தாக்கல் செய்துள்ளார். 10.08.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அது குற்றம்சாட்டப்பட்டவரால் பெற்றுக்கொள்ளாமல் அஞ்சல்துறை வழங்கிய திருப்புதல் மேற்குறிப்புடன் வந்ததாக சாட்சியமளித்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் பு.த.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார்.

17. மேலும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " எந்த தேதியில் யாரை வைத்து காசோலை கொடுத்ததார் என்றால் 20.04.2023ம் தேதி அன்று மூன்று மாதத்தில் 2ரூ வட்டியுடன் கொடுப்பதாக சொன்னதால், ரூ.4,24,000த்திற்கு காசோலையை 20.07.2023ம் தேதிக்கு சங்கர் முன்னிலையில் கொடுத்தார் என்றும், என்றும்,



K.ஜெ.பு 22.4.2026

காசோலை எண் நினைவில்லை என்றும் கூறியிருப்பதால் புகார்தாரர் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில்

**" Human mind is not a Tape recorder. "**

என்பது ஒரு உளவியலின் அடிப்படை கொள்கையாகும். உண்மையை கண்டறியும் முயற்சியில் மனிதனின் மனம் ஒரு Tape recorder அல்ல என்பதை நாம் உணர வேண்டும். நினைவாற்றல் என்பது ஒரு தனிமனிதனின் பார்வை மற்றும் அகநிலை எதார்த்தத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு புரிதல் சார்ந்த செயலாகும். மிகவும் நேர்மையான சாட்சி கூட முழுமையற்ற அல்லது மனித உணர்வுகளால் சிறிது மாற்றப்பட்ட வாக்குமூலத்தை அளிக்கக்கூடும் என்ற புரிதலுடன் ஆதாரங்களை மதிப்பீடு செய்வது நீதியின் தேவையாகும். எனவே, சாட்சியங்களின் சீரான தன்மைக்கும், மனித நினைவாற்றலின் இயல்பான குறைபாடுகளுக்கும் இடையே ஒரு கவனமான சமநிலையை பேண வேண்டும்.

18. அதனால், எதிரிதரப்பு குறுக்கு விசாரணையின்போது தேதியை மாற்றி கூறியதாலோ, காசோலை எண் சொல்லவில்லை என்ற சிறிய முரண்பாடுகளால் மட்டுமே வைத்து இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியம் வழுவிழந்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலாது.

19. மேலும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது "காசோலையில் எழுதப்பட்டடுள்ள மையில் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். கையெழுத்து வேறு மையில் உள்ளது. குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கறிஞரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். இந்த காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப ஆட்சேபனை இருக்கறதா என்றால் இல்லை. என்றும் கூறியிருப்பதால் புகார்தாரர் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் குறுக்கு விசாரணையின்போது இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 73-ன் கீழ் நீதிமன்றம் காசோலையில் உள்ள கையெழுத்தையும், புகார்தாரரின்



K.Y.U 22.4.2026

கையெழுத்தை ஒப்பிட்டு பாத்தபோது முழுமையாக ஒத்துப்போக வில்லை என்றும், ஓரளவுதான் ஒத்துப்போனதாக நீதிமன்றம் கருதியது. ஆனால், எதிரி தரப்பில் அந்த "காசோலையில் எழுதப்பட்டடுள்ள மையில் வேறுபாடு மற்றும் கையெழுத்து வேறு மையில் உள்ளது என்பதை நிரூபிக்கவும் மேலும், அது புகார்தாரரால் நிரப்பப்பட்டது என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதாலும், மேலும் எதிரி தரப்பு சாட்சி 1 அவரது முதன்மை விசாரணையின்போது **" நாங்கள் புகார்தாரரிடம் இருந்து பணம் வாங்கவில்லை என்றும் சங்கர் என்பவரிடம் பணம் வாங்கும்போது என் தந்தையின் பேரில் உள்ள காசோலை ஒன்றை சங்கர் என்பவரிடம் கொடுத்தோம் என சாட்சியம் அளித்துள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் காசோலையானது புகார்தாரரால் நிரப்பப்பட்டது என்றும், மையில் வேறுபாடு உள்ளது என்றும், அதனால்** புகார்தாரர் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் **அதனை நிரூபிக்க வேண்டிய சுமை எதிரி தரப்பில் உள்ளதாக நீதிமன்றம் கருதுகிறது. மேலும், புகார்தாரரிடம் பணம் வாங்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், காசோலை மட்டும் புகார்தாரரால் நிரப்பப்பட்டது என்று கூறுவது வழக்கிற்காக கூறப்படுகிறதோ என்ற சந்தேகம் நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.**

20. குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்கறிஞரின் கையொப்பம் இல்லை என்பதால் அந்த வழக்கறிஞர் அறிவிப்பு செல்லாது என்று வாதிட்டநிலையில் அறிவிப்பில் கையொப்பம் இல்லை என்றாலும், புகார்தாரர் நீதிமன்றத்தில் அந்த அறிவிப்பு தான் அனுப்பியதுதான் என்றும், அதற்கான தபால்துறை ஆதாரங்களை(Postal Receipt/acknowledgment) சமர்பித்திருப்பதால் அதை ஒரு தொழில்நுட்ப குறைபாடே (Technical Lapse) என்றே நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பு.த.சா.ஆ3 மற்றும் புகார்தாரரின் உறுதிபடுத்தப்பட்ட சாட்சியத்தின்படி சட்ட அறிவிப்பின் நோக்கம் (பணம் செலுத்துமாறு கோரி) முறையாக குற்றம்சாட்டப்பட்டவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கையெப்பம் இல்லாமை என்ற தொழில்நுட்ப காரணத்திற்காக மட்டும் இவ்வழக்கை நிராகரிக்க முடியாது.



22.4.2026

மேலும், இந்த நீதிமன்றம் அறிவிப்பின் உண்மையான உள்ளடக்கத்திற்கும் அதை தொடர்ந்து வந்த புகார்தாரரின் செயல்களுக்கும் முன்னுரிமை அளிக்கிறது.

21. அதனால், வழக்கறிஞர் அறிவிப்பில் கையொப்பம் இல்லை என்பதால் மட்டும் இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியம் வழுவிழந்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலாது. எனவே, ஆவணங்களை தாக்கல் செய்து இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக எ.த.சா.1 விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் கூறியதுபோல சங்கர் என்பவரிடமிருந்துதான் பணம் வாங்கினோம். அதற்கு பிணையமாக என் தந்தையின் பெயரில் உள்ள காசோலை ஒன்றை சங்கர் என்பவரிடம் கொடுத்ததாகவும், பிறகு அந்த காசோலையை கேட்டபோது தர மறுக்கிறார்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறிய நிலையில் அதை நிரூபிக்கும் பொருட்டு சங்கர் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவோ, அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கத் தவறிவிட்டது என்றும் மேலும், அந்த காசோலையை யாரிடம் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை என்றும், புகார்தாரரை எனக்கு தெரியவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ள நிலையில் சங்கரிடம் கொடுத்த காசோலைதான் இந்த வழக்கின் காசோலை என்று தற்போது கூறுவது நீதிமன்றத்திற்கு சந்தேகத்தை எழுப்புகிறது. மேலும், "**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்த பிறகோ அல்லது வழக்கின் விவரங்கள் தெரிந்த பிறகோ மேற்படி சங்கரிடம் சென்று கையளித்த காசோலையை கேட்டோமா என்றால் கேட்டோம்.** காசோலையை கேட்டபோது தர மறுக்கிறார்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்றும், அதே குறுக்கு விசாரணையில் வழக்கறிஞர் அறிவிப்பை எனது தந்தை பெற்றுக்கொண்டாரா என்றால், வீட்டிற்கே வரவில்லை என்றும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேற்கூறியதுபோல் அந்த காசோலையை



K.Gug 22.4.2026

தர மறுத்ததற்காக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வில்லை என்பதாலும், எ.த.சா.1ன் சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பிற்கு சாதகமாக அமையவில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

97

23. மேலும், பு.த.சா.ஆ.3ல் வழக்கறிஞர் அறிவிப்பு குற்றம்சாட்டப்பட்டவரால் பெற்றுக் கொள்ளாமல் Unclaimed என திருப்பப்பட்டுள்ளதால், குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி தெரியாது என வாதிட்ட நிலையில் "***பொது உட்பிரிவு சட்டம் 1897 பிரிவு 27-ன் கீழ் (General clauses act 1897 Sec.27) r/w The settled legal position in C.C.Alavi Haji Vs. Palapetty Muhammed*** " சரியான முகவரிக்கு (Properly addressed) தேவையான கட்டணம் செலுத்தி (Pre-paying postage, Registered post) அனுப்பியிருந்தால் அந்த தபால் சாதாரண தபால் சென்றடைய வேண்டிய நேரத்தில் சென்றடைந்தாகவே சட்டப்படி கருதப்படும் (Deemed to have been served). எனவே, சரியான முகவரிக்கு அனுப்பப்பட்ட தபால் Unclaimed என திருப்பினால் சட்டப்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு விட்டதாகவே (Service of notice is deemed to have been effected) கருதப்படும். இந்த அனுமானத்தை தவறென நிரூபிக்கும் பொறுப்பு (Burden of proof) குற்றம்சாட்டப்பட்டவரிடமே உள்ளது. ஆனால் இந்த வழக்கில் இந்த அனுமானத்தை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் நிரூபிக்க வில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

24.எ.த.சா.2 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும். சங்கர் என்பவர் எதிரியிடமிருந்து பல முறை வீட்டில் வந்து பணம் வாங்கிச் செல்வார். இரண்டு வருடங்களுக்கு இந்துஸ்தான் வங்கியின் செக் லீப் ஒன்னை சங்கர் என்பவர் எதிரியிடமிருந்து வாங்கிச் சென்றார். அந்த காசோலையை கொடுப்பதாக கூறினார்கள் ஆனால் கொடுக்கவில்லை. இது குறித்து நேரடியாக தெரியும் என சாட்சியம் அளித்துள்ள நிலையில், புகார்தாரர் குறுக்கு விசாரணையின்போது பணம் சம்மந்தமான பிரச்சனை முடிவுக்கு வந்ததாக கூறினால் அது குறித்து எனக்கு தெரியாது. பணம் பிரச்சனை குறித்து நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்புதான் தெரியும் என்றால் சரிதான், அதன் பிறகு இது குறித்து எதுவும் பார்க்கவில்லை என்று சாட்சியம்



K.ஜோதி 22.4.2026

அளித்துள்ள நிலையில் எ.த.சா.2ன் சாட்சியம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு வலுசேர்க்கும் வகையில் அமையவில்லை என்றும், மேலும்,இந்துஸ்தான் வங்கியின் செக் லீப் ஒன்னை சங்கர் என்பவர் எதிரியிடமிருந்து வாங்கிச் சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதை உறுதிபடுத்தும் விதமாகவோ அல்லது இந்த வழக்கின் காசோலை என்று சந்தேகத்திற்கு இடமின்றி எ.த.சா.2ன் சாட்சியம் மூலம் நிரூபிக்க வில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

25. காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புக்கொண்டால் பிரிவு 139ன் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் அந்த காசோலை ஒரு சட்டபூர்வமான கடனுக்காகதான என்ற அனுமானம் (Presumption) தானகவே உருவாகிறது. அந்த அனுமானத்தை மறுக்க குற்றம்சாட்டப்பட்டவர் வெறும் கதைகளை சொல்லாமல் **"சாத்தியக்கூறுகளின் முன்னுரிமை" (Preponderance of probilities)** அடிப்படையில் வலுவான ஆதரங்களை சமர்ப்பிக்க வேண்டும்,

26. **பிரிவு 118(g)**–மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவின் கீழ் நீதிமன்றம் ஒரு காசோலை வைத்திருப்பவரை முறையான உரிமையாளர் என்றே முதலில் கருதும் அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவரிடம் உள்ளது. பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவின் கீழ் புகார்தாரர் தன்னை ஒரு **"Holder in due course"** என நிருபித்து விட்டால் அவர் அந்த காசோலை தொகைக்கு சட்டபூர்வ தகுதியானவர் ஆகிறார். குறையற்ற உரிமை **(Defect – free Title)** காசோலையை முதலில் கொடுத்தவருக்கும் வாங்கியவருக்கும் இடையே ஏதேனும் தனிப்பட்ட பிரச்சனைகள் இருந்தாலும் **"Holder in due course" அந்த காசோலைக்கான பணத்தை முழு உரிமை படைத்தவர்.**

27. இவ்வழக்கில் காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் மறுக்காத பட்சத்தில் புகார்தாரர் அந்த காசோலையின் சட்டபூர்வமான உரிமையாளர் (Holder in due course) ஆவார். இவ்வழக்கில் எதிரி தரப்பில் காசோலையில் உள்ள



22.4.2026

கையொப்பத்தையோ காசோலையோ மறுக்கவில்லை. மேலும் காசோலையானது பிணையமாக சங்கர் என்பவரிடம் கொடுத்ததாகவும், பிறகு அந்த காசோலையை வாங்கிக் கொண்டு காசோலையை திருப்பி தரவில்லை என புகார்தாரரின் குறுக்கு விசாரணையில் கூறியுள்ள நிலையில் அதை நிரூபிக்கும் பொருட்டு அதற்கான சாண்றாணவங்களோ சாட்சிகளோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும் குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சங்கரிடம் தான் காசோலையானது கொடுக்கப்பட்டது என்பதற்கு முறையான ஆவணம் இல்லாத வரை புகார்தாரின் **முறையான உரிமையாளர் (Holder in due course) என்ற தகுதியை அங்கிகரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கருதுகிறது.**

28. மேலும் இவ்வழக்கில் சங்கர் என்பவரை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தவறிவிட்டதாக நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எ.த.சா.ஆ.1ஐ பரிசீலனை செய்து பார்க்கும்போது அதில் உள்ள வங்கி கணக்கு எண் புகார்தாரருடையது என்றோ எதற்காக அந்த பணம் அனுப்பப்பட்டது என்ற விவரமோ இல்லை என்பதாலும், மேலும் எ.த.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கிற்கு வலுவூட்டும் வகையில் அமையவில்லை என்பதாலும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் பிரிவு 139 ன் கீழ் எதிரிக்கு சாதகமான அனுமானத்தை பொய்ப்பிக்க தவறிவிட்டது.

29. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் பொய் சாட்சி, அவர் யார் என்றே தெரியாது. என்னையும் யாரென்றே தெரியாது. சங்கர் என்பவர் வாங்கிக் கொடுத்தார் நான் திருப்பி சங்கர் என்பவரிடம் முழு தொகையையும் கட்டி விட்டேன். காசோலையை வாங்கி தருவதாக கூறினார். என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சாட்சியங்களோ சான்றாவணமோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம்**



K.ஸ்ரீபதி 22.4.2026

**திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.** மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்பட்டவரின் கடமை என கூறுகிறது. இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி தரப்பு வாதத்தின்போது சென்னையில் வங்கிக்கணக்கு உள்ளபோது இவ்வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என வாதிடப்பட்ட நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 142(2) (a) ன் படி ஒரு கணக்கின் மூலம் வசூலிக்கப்படும் காசோலை, பணம் பெறுபவர் (Payee) தனது கணக்கை எங்கு வைத்துள்ளாரோ அந்த வங்கியின் கிளை அமைந்துள்ள உள்ளூர் அதிகார வரம்பிற்குள் உள்ள நீதிமன்றமே காசோலை வழக்கை விசாரிக்க அதிகாரம் கொண்டது என்று கூறுகிறது.

30. " **Doctrine of place of presentation** " என்ற கோட்பாட்டின்படி காசோலை பணமாக பெறுவதற்காக சமர்பிக்கப்படும் இடமே Territorial Jurisdiction (எல்லைக்குட்பட்ட அதிகார வரம்பை தீர்மானிக்கிறது. புகார்தாரர் காசோலையை இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட வாணியம்பாடி வங்கிக்கிளையில் சமர்பித்துள்ளதாலும், பு.த.சா.ஆ.2 ஆனது வாணியம்பாடி கிளை மூலம் கொடுக்கப்பட்டது என்பதாலும், இந்த நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தது சட்டப்படி சரியானது என்றும், பிரிவு 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

31. மேலும் வழக்கின் குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கு காசோலையானது என்னுடையது அல்ல என்றோ, காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றோ மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. இந்த முதல் கேள்வியின் போது கூட சங்கர் என்பவரிடம் தான் செக்கை கொடுத்தேன் என கூறியிருக்கிறாரே தவிர, வழக்கு



K.ஜோதி 22.4.2026

காசோலையானது என்னுடையது அல்ல என்றோ அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றோ குறிப்பிட்டு கூறவில்லை. மேலும், எதிரி தரப்பு வாதத்தின்போதும் காசோலை செக்யூரிட்டிக்காக கொடுத்திருந்ததாகவும், அந்த காசோலையை தான் தற்போது எவ்வித தகவலும் இன்றி வசூலுக்காக செலுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிரி புகார்தாரரிடம் சட்டப்பூர்வமான ஒரு கடனை பெற்றுள்ளார்கள் என்பதும், அந்த சட்டபூர்வமான கடனை நிறைவேற்றுவதற்காக காசோலை கொடுக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

32. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.3 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

33. மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

34. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ்



K.ஏபூ 22.4.2026

குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ.4,24,000 + செலவுத் தொகை ரூ.10,000/– மொத்தம் ரூ.4,34,000/–த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

35. முடிவாக, குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிக்கபட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.4,24,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.4,34,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்டயீடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர்கள் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

K.[illegible] 22.4.2026

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**இணைப்புகள்**

**குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பு.த.சா.1 | திரு.பாலசுப்ரமணி |

**குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பு.த.சா.ஆ.1 | 26.07.2023ம் தேதியிட்ட சென்னை IndusInd வங்கி, வாணியம்பாடி கிளையின் 878374 என்ற எண்ணுள்ள ரூ.4,24,000/–க்கான காசோலை அசல். |
| 2. | பு.த.சா.ஆ.2 | 03.08.2023 தேதியிட்ட Fincare Small Finance bank Ltd, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசல் |
| 3. | பு.த.சா.ஆ.3 | 10.08.2023 தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் துறை வழங்கிய திருப்புதல் மேற்குறிப்பு. |

**குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி** –

| | | |
|---|---|---|
| 1. | எ.த.சா.1 | மணிகண்டன் |
| 2. | எ.த.சா.2 | ராஜா |

**குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | எ.ம.த.சா.ஆ.1 | பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ரூ.10000/– செலுத்தியதற்காக இரசீதின் நகல். |

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் எதிரிக்கு இலவசமாக தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.
3. எதிரி கு.வி.மு.ச. பிரிவு 389 (3) மனுவின் பேரில் தண்டனை காலம் 1 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

22.4.2026

Received copy
Admitted for Accused.

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.